


# குறள் தேனீப் போட்டி

# 2024

**பொங்கல் விழா 2024**

## பிரிவுகள்

| | |
|---|---|
| அரும்பு | மழலை நிலை மாணவர்கள்<br>Pre-k 1 and Pre-k2 students |
| மொக்கு | அடிப்படை நிலை மற்றும் வகுப்பு-1 மாணவர்கள்<br>Kindergarten & Grade-1 Students |
| மொட்டு | உயர் அடிப்படை நிலை மாணவர்கள், வகுப்பு 2,3 மாணவர்கள்<br>Advanced KG, Grade 2, 3 Students |
| மலர் | வகுப்பு 4, 5 மாணவர்கள்<br>Grade 4, 5 Students |
| பூ | வகுப்பு 6,7,8 மாணவர்கள்<br>Grade 6,7,8 Students |

- **இந்தக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள திருக்குறள்கள் மட்டுமே போட்டிக்கான திருக்குறள்கள்.**
- Participants are welcome to recite any number of Kurals without a minimum or maximum limit. *Children, in particular, are encouraged to recite even 1 or 2 Kurals*. While we highly value participation, it is worth noting that reciting a greater number of Kurals may enhance your chances of success in the competition.
- Kindly be advised that participants have the flexibility to recite the Kurals in any order of their choosing. However, should they opt for a different sequence, it is imperative that they furnish the judges with a printed copy of the Thirukkurals in the exact order of their recitation. This will assist the judges in following the Kurals.

## போட்டி நடைமுறை

- குறள்களின் பிரிவுகள்

| | |
|---|---|
| அரும்பு, மொக்கு | பிரிவு 1, 2 குறள்கள் |
| மொட்டு, மலர், பூ | பிரிவு 2 குறள்கள் |

- மதிப்பெண்கள்: ஒவ்வொரு குறளுக்கும் (For each Kural)
    1. சரியாக கூறுதல் (Correctness) - 5 மதிப்பெண்கள்
    2. சரளமாக கூறுதல் ( Fluency) - 5 மதிப்பெண்கள்
    3. சரியான உச்சரிப்பு (Pronunciation) - 5 மதிப்பெண்கள்

முதல் சுற்றுப் போட்டி

- மாணவர்கள் தாங்கள் கற்ற குறள்களை வரிசையாக கூற வேண்டும்.
- ஒரு மாணவருக்கு அதிகபட்சம் ஐந்து நிமிடம் வழங்கப்படும். இந்த ஐந்து நிமிடத்திற்குள் அவர்கள் கூறும் ஒவ்வொரு குறளுக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
- அதிக மதிப்பெண் எடுக்கும் மாணவர்கள் அடுத்தச் சுற்றுக்கு தகுதி பெறுவார்கள்.
- 

இறுதிச்சுற்றுப் போட்டி

- வரிசையாக குறள்களை கூறுதல்
- ஒரு குறளின் தொடக்க எழுத்தைக் கூறி குறளைக் கூற சொல்லுதல்.
- மலர் மற்றும் பூ பிரிவு மாணவர்களுக்கு மட்டும் - குறளுக்கு பொருளைக் கூறுதல். மனப்பாடம் செய்யாமல் ஒரு குறளின் பொருளை உணர்ந்து கூறுதலுக்கு கூடுதல் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

### நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## பிரிவு – 1 குறள்கள்

**அரும்பு மற்றும் மொக்கு பிரிவிற்கான திருக்குறள்கள்**
**இக்குறள்களை அரும்பு மற்றும் மொக்கு பிரிவு மாணவர்கள் மட்டுமே ஒப்பிக்க முடியும்.**

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.
**எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல் உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.**

2. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.
**கல்விக் கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.**

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.
**உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.**

4. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.
**அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்: அன்பு உடையவர் தம் உடம்மையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.**

5. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.
**ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல; அவர் தீமை செய்திருந்தால் அதை மட்டும் அக்கணமே மறந்து விடுவது நல்லது.**

6. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.
**நெருப்பு சுட்ட புண்கூட ஆறி விடும்; ஆனால் வெறுப்புக் கொண்டு திட்டிய சொற்கள் விளைத்த துன்பம் ஆறவே ஆறாது.**

7. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.
**ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.**

8. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.
எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்கவேண்டும்; இயலாதவர்கள் அந்தத் துறையில் ஈ.டுபடாமல் இருப்பதே நல்லது.

9. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
மனச்சாட்சிக்கு எதிராகப் பொய் சொல்லக்கூடாது; அப்படிச் சொன்னால், சொன்னவரின் மனமே அவரைத் தண்டிக்கும்.

10. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.
நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்து விட வேண்டும்.

**பிரிவு - 2 குறள்கள்**

அனைத்து பிரிவு மாணவர்களும் இந்தப் பிரிவில் உள்ள திருக்குறள்களை ஒப்பிக்கலாம்.

1. மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்
   ஆகுல நீர பிற.

**ஒருவர் மனது அளவில் தூய்மையாக இருப்பதுதான் சிறந்த அறச்செயல் ஆகும்.**

2. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
   புன்கண்நீர் பூசல் தரும்.

**ஒருவர் மீது உள்ள அன்பை மறைத்து வைக்க முடியாது. நம் கண்களில் வழியும் கண்ணீர் நம் அன்பை வெளிப்படுத்தி விடும்.**

3. அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் அன்புடையர்
   என்பும் உரியர் பிறர்க்கு.

**அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தன்னுடையது என்பர், அன்பு உடையவர் தன் உடல், பொருள் எல்லாம் பிறர்க்குக் கொடுப்பர்.**

4. என்பில் அதனை வெயில் போலக் காயுமே
   அன்பில் அதனை அறம்.

**எலும்பு இல்லாத உடலை வெயில் சுடுவதுபோல், அன்பு இல்லாதவர்களை அறம் சுடும்.**

5. மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

முகந்து பார்த்தால் அனிச்சப்பூ வாடிவிடும்.
முகம் வேறுபட்டுப் பார்த்தால் விருந்தினர்
மனம் வருந்திவிடும்.

6. இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந்து அற்று.

இனிமையான சொற்கள் இருக்கும்போது. கடுமையான சொற்களைப் பேசுவது பழங்கள் இருக்கும்போது காய்களைச் சாப்பிடுவது போன்றது.

7. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

எந்த நன்மையும் எதிர்பாராமல் ஒருவர் செய்யும் உதவிக்கு மண் உலகம், விண் உலகம் இரண்டும் ஈடாகாது.

8. காலத்தினால் செய்த உதவி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

தகுந்த நேரத்தில் சின்ன உதவி செய்தாலும்,
அது உலகத்தை விட மிகப்பெரிதாகும்.

9. நன்றி மறப்பது நன்று அன்று நன்று அல்லது
அன்றே மறப்பது நன்று.

ஒருவர் செய்த உதவியை மறக்கக்கூடாது,
செய்த தீமையை உடனே மறப்பது நல்லது.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

**எதை மறந்தாலும், ஒருவர் செய்த உதவியை
மறக்கவே கூடாது.**

11. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு.

**எந்தப் பொருளைக் காக்க முடியாவிட்டாலும், நாக்கினை காத்துச் சரியாகப்பேசவேண்டும். இல்லாவிட்டால் பேசும் வார்த்தையின் மூலம் பெரிய துன்பம் வரும்.**

12. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை.

**நிலம் தன் மேல் நின்று குழி பறிப்பவரைப் பொறுத்துக் கொள்வதுபோல், ஒருவர் தன்னைத் தவறாகப் பேசுபவரைப் பொறுப்பது நல்லது.**

13. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொலல்.

**அரிய பயனைத் தரும் என்றாலும், பிறருக்கு நன்மையோ,பயனோ இல்லாத சொற்களை அறிவு உடையவர் பேசமாட்டார்.**

14. சொல்லுக சொல்லில் பயன் உடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச்சொல்.

**பயன்தரும் சொற்களை மட்டுமே பேசவேண்டும்.
பயன் தராத சொற்களைப் பேசக்கூடாது.**

15. பாத்தூண் மரீஇ இவனைப் பசி என்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

**தன்னிடம் இருக்கும் உணவினை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்பவர்களுக்குப் பசி என்பதே இருக்காது.**

16. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

**பிறருக்கு உதவுதல், புகழ் பெற்று வாழ்தல் இரண்டும் தவிர மனிதருக்கு வேறு பெருமை இல்லை.**

17. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

**பிற உயிரைக் கொல்லாதவரை, உயிர்களைக் கொன்று உண்ணாதவரை இந்த மண்ணில் வாழும் எல்லா உயிர்களும் இரு கை கூப்பி வணங்கும்.**

18.வாய்மை எனப்படுவது யாது எனின் யாது ஒன்றும்
தீமை இலாத சொலல்.

**யாருக்கும் துன்பம் தராத சொற்களைப் பேசுவது தான் உண்மை எனப்படும்.**

19. தன் நெஞ்சு அறிவது பொய் அற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்.

**தன் உள்ளத்திற்குப் பொய் என்று தெரிந்தும் பொய் சொன்னால் நம் உள்ளமே நம்மை வருத்தும்.**

20. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்.

**மற்றவர்கள் மேல் உள்ள கோபத்தை மறந்து விட வேண்டும். மறக்காவிட்டால் அந்தக் கோபமே தீமை அளித்துவிடும்.**

21. பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

**உலகத்தில் உள்ள நல்ல செயல்களில் எல்லாம் சிறந்தது, தன்னிடம் இருக்கும் பொருளை அனைவருக்கும் பகிர்ந்து வாழ்வது ஆகும்.**

22. தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

**தன்னுடைய உயிர் போகும் நிலை வந்தாலும், இன்னொரு உயிரைக் கொல்லும் செயலைச் செய்யக் கூடாது.**

23. கற்க கசடற, கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

**நன்றாகப் படிக்க வேண்டும். படித்தது போல நடந்து கொள்ள வேண்டும்.**

24. கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றயவை.

**ஒருவருக்கு எப்பொழுதும் அழிவும், இழிவும் தராத செல்வம் கல்வி ஆகும். மற்றவை எதுவும் செல்வங்கள் அல்ல.**

25. செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்.

**காதினால் கேட்டுப் பயன் பெற எதுவும் இல்லாதபோது, சிறிது வயிற்றுப்பசிக்கும் உணவு தரப்படும்.**

26. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

**நல்ல செய்திகளைக் கேட்கும் அளவிற்கு அவை நிறைந்த நன்மையத் தரும்.**

27. எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

**ஒரு செயலைச் செய்யும் முன் தெளிவாக யோசித்து முடிவு செய்ய வேண்டும். முடிவு செய்தபின், முடியுமா? என்று நினைப்பது தவறு.**

28. சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம் தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

**தன்னைச் சுற்றி உள்ள உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உதவி அன்புடன் வாழ்வதுதான் நிறைய செல்வங்களைப் பெற்றதற்குப் பெருமை ஆகும்.**

29. உள்ளியது எளிது மண் மற்றும் தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

**நாம் வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிற செயலை உறுதியோடு நினைத்துச் செய்தால் எளிதாக வெற்றி பெறலாம்.**

30. உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் மற்று அது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

**நாம் அடைய நினைப்பது உயர்ந்த செயலாக இருக்கவேண்டும். அதைப்பெற முடியாவிட்டாலும் தோல்வியாக ஆகாது.**

31. முயற்சி திருவினை ஆக்கும் முயற்று இன்மை
இன்மை புகுத்துவிடும்.

**முயற்சி செய்தால் மட்டுமே செல்வம் வரும். முயற்சி செய்யாது இருந்தால் வறுமை நிலை வரும்.**

**32.** இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

**துன்பம் வந்த போது அதற்க்காக வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவார்.**

33. அடுக்கி வரினும் அழிவு இலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்.

**திரும்பத் திரும்ப துன்பம் வந்தாலும், அதைகண்டு பயம் இல்லாமல் உறுதியோடு இருப்பவரைப் பார்த்து அந்தத் துன்பமே துன்பப்படும்.**

34. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின் கண் சோர்வு.

**ஒருவருக்கு நல்லதும், கெட்டதும் பேசும் வார்த்தையினால் வரும். அதனால் பேசும்பொழுது கவனமாகப் பேச வேண்டும்.**

35. சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல் அச்சொல்லின்
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

**நாம் சொல்லும் வார்த்தையை வெல்லும் வார்த்தை வேறு இல்லை எனத் தெரிந்து சொல்லவேண்டும்.**

36. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

**புகழையும், நன்மையயும் தராத செயலைச் செய்வதை விடவேண்டும்.**

37. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

**தாம் எண்ணியதை செய்வதில் உறுதியோடு இருந்தால் எண்ணிய செயலில் வெற்றி பெறலாம்.**

38. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

**உள்ளத்தில் உறுதியோடு செய்யத் தொடங்கிய வேலையை மனம் சோர்வுபடாமல் செய்து முடிக்க வேண்டும்.**

39. கற்று அறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல் தெரிதல் வல்லார் அகத்து.

**நன்றாகப் படித்தவர்களின் கல்வி அறிவு, ஒரு கருத்தைத் அவர் தெளிவாகப் பேசும்பொழுது தெரியும்.**

40. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார் முன்
கற்ற செலச் சொல்லுவார்.

**நன்றாகப் படித்தவர்கள் முன்னால், தான் படித்துத் தெரிந்து கொண்டதைத் தெளிவாகச் சொல்லும் ஒருவரே படித்தவர்கள் அனைவரிலும் சிறந்தவர்.**

41. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

**பார்க்கும் பொழுது முகத்து அளவில் சிரித்துப் பேசுவது நட்பு இல்லை, மனது அளவில் உண்மையாகப் பழகுவதே நட்பு ஆகும்.**

42. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

**நம் உடம்பில் இருந்து நழுவும் உடையைச் சரி செய்ய உதவும் கையைப்போல, துன்பம் வரும்போது முன்வந்து உதவுவதுதான் சிறந்த நட்பு.**

43. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

**தெளிவாக ஆராய்ந்து தேர்ந்து எடுக்காத தீய நட்பு இறப்பது போலத் துன்பம் தரும்.**

44. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

**உண்ட உணவு முழுமையாகச் செரிமானம் ஆன பின்னர் சாப்பிட்டால் நம் உடம்பிற்கு மருந்து என்பதே தேவை இல்லை.**

45. அற்றால் அளவு அறிந்து உண்க அஃது உடம்பு
பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு.

**உண்ட உணவு செரிமானம் ஆனபின்னரும், எவ்வளவு உணவு சாப்பிடுகிறோம் என்று தெரிந்து உண்பதே நிறைய நாட்கள் வாழ்வதற்கு வழி ஆகும்.**

46. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

**நம் உடம்புக்கு ஒத்துவரக்கூடிய உணவாக இருந்தாலும் அதிகமாக உண்ணாமல், அளவாக உண்டு வாழந்தால் தொல்லை இன்றி வாழலாம்.**

47. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

**வாழ்வில் உயர்வான நிலை வரும்போது பணிவாக இருக்க வேண்டும். தாழ்வான நிலை வரும்போது வருந்தி தன் நிலையை விட்டுக் கொடுக்காமல் இருக்க வேண்டும்.**

48. கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடு உடையது இல்.

**தன் கடமையைச் செய்வதில் சோர்வு கொள்ளாமல் ஒருவன் முயற்சி செய்தால் அதைவிடப் பெருமை வேறு இல்லை.**

49. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாது ஒன்றும் கண்பாடு அரிது.

**நெருப்புக்குள் கூடத் தூங்கிவிடலாம்.
வறுமையில் வாழும்போது தூங்குவது முடியாது.**

50. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுற்றும் உலகு.

**தவறு இல்லாது வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லது செய்பவரை, மக்கள் தன் உறவினராக ஏற்றுக் கொள்வர்.**




# குறள் தேனீப் போட்டி 2024